**பள்ளிக்கல்வித்துறை – விழுப்புரம் மாவட்டம் – பத்தாம் வகுப்பு – தமிழ்**

**நேரம் – 45 நிமிடங்கள் குறுந்தேர்வு – 2 (2024-25) மதிப்பெண்கள் - 25**

**உரிய விடையினைத் தெரிவு செய்து எழுதுக.** 5×1=5

1. செய்தி 1 – ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15ஐ உலகக்காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

   செய்தி 2 – காற்றாலை மின்உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாம் இடத்தில் உள்ளது எனக்குப் பெருமையே.

   செய்தி 3 – காற்றின் ஆற்றலைக் கொண்டு கடல் கடந்து வாணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.

   அ) செய்தி 1 மட்டும்சரி ஆ) செய்தி 1,2 ஆகியனசரி

   இ) செய்தி 3 மட்டும்சரி ஈ) செய்தி 1,3 ஆகியனசரி

2. ”உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்

   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்” – பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?

   அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை

   இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

3. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

   அ. கொண்டல் - 1. மேற்கு

   ஆ. கோடை - 2. தெற்கு

   இ. வாடை - 3. கிழக்கு

   ஈ. தென்றல் - 4. வடக்கு

   அ) 1,2,3,4, ஆ) 3,1,4,2 இ) 4,3,2,1 ஈ) 3,4,1,2

4. ”பாடுஇமிழ் பனிக்கடல் பருகி” என்னும் முல்லைப்பாட்டு உணர்த்தும் அறிவியல் செய்தி---

   அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சியடைதல்

   இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

5. ’<u>**பெரியமீசை**</u>’ சிரித்தார் – வண்ணச்சொல்லுக்கான தொகையின் வகை------.

   அ) வேற்றுமைத்தொகை ஆ) அன்மொழித்தொக

   இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4×2=8**

6. நமக்கு உயிர் காற்று

   காற்றுக்கு வரம் மரம்

   மரங்களை வெட்டி எறியாமல்

   நட்டு வளர்ப்போம் - இத்தொடர்களைப் போலவே உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்கள் எழுதுக.

7. வசன கவிதை குறிப்பு தருக.

www.Padasalai.Net

8. மாஅல் பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.
9. தண்ணீர்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்க.
10. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
11. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ. உயிரின வாழ்வின் அடிப்படை இயற்கை.

ஆ. தொல்காப்பியர் உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்கிறார்.

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 4×3=12

**(குறிப்பு : 16வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)**

12. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்...- முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு நீர் தன்னைப் பற்றி பேசினால்... கற்பனையில் தலைப்புகளை எழுதுக.
13. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறி காற்றும் பேசுவது போல் ஒரு உரையாடல் அமைக்க.
14. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர் கடிகாரத்தில் மணி பார்த்தாள். - இப்பத்தியில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விவரித்து எழுதுக.
15. கீழ்க்காணும் உரையினைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

கிரேக்க அறிஞர் ஹிப்பாலஸ் , பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார். கிரேக்க மாலுமி ஹிப்பாலஸ், பருவக்காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு நேரே விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தார். அதுமுதல் யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறி துறைமுகத்திற்கு வந்து சென்றன. அந்த பருவக்காற்றுக்கு யவனர், அதைக் கண்டுபிடித்தவர் பெயராகிய "ஹிப்பாலஸ்" என்பதையே சூட்டினர்.

அ) யவனக் கப்பல்கள் வந்து சென்ற துறைமுகம் எது?

ஆ) ஹிப்பாலஸ் எந்நாட்டு மாலுமி?

இ) "ஹிப்பாலஸ் பருவக்காற்று" என்று பெயர் சூட்டியவர் எவர்?

16. "சிறுதாம்பு தொடுத்த " எனத் தொடங்கும் 'முல்லைப் பாட்டு' பாடலினைப் பிழையின்றி எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com